<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS** 298/2009

2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 30.10.2024

Pw2 ( எஸ். கே. சதாசிவம் )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**4,5,7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மனைவி தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆகியவற்றை படித்து பார்த்து தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். எதிருரையில் பிரதிவாதிகள் கடனிற்காக தான் பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் அப்படியல்ல. 1,2 பிரதிவாதிகள் முதலில் எனக்கு எக்ரிமேண்ட் எழுதி கொடுத்து அதன்பின் பூசப்பன் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்து அவர் மூலமாக என் மனைவிக்கு கிரயம் எழுதி கொடுக்கப்பட்டதாக என் வழக்கு என்றால் ஆமாம். எனவே நான் இந்த வழக்கிற்கு 3 ம் நபர் அல்ல என்றும், வழக்கிற்கு சம்பந்தப்பட்ட நபர் தான் என்றால் ஆமாம். 2000 ஆண்டு சமயத்தில் தாவா சொத்தின் விலை குறைவாக இருந்தது என்று பிரமாண பத்திரிக்கையில் நான் கூறியிருப்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், ஆனால் அந்த சொத்தின் விலை குறைவாக தான் 2000 ஆண்டில் இருந்தது. குடும்ப கஷ்டத்திற்காக 1,2 பிரதிவாதிகள் கிரயம்செய்து கொள்ள கேட்டார்கள் என்று நான் சொல்லியுள்ளதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், ஆவணங்கள் இல்லை, நேரடியாக கேட்டார்கள். 1998 முதல் 2005 ஆண்டு காலம் வரை தமிழகத்தில் குறிப்பாக ஈரோடு மாவட்டத்தில் விவசாய நில விற்பனையோ, வீட்டு மனையோ விற்பனையாகாமல் விலை கிடைக்காமல் கடும் பணத் தட்டுப்பாடு இருந்தது என்றும், நிலமோ மனையோ வாங்குவாரின்றி மக்கள் கடும சிரமத்தில் இருந்ததாக நான்

சொல்லியுள்ளதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், ஆவணம் எதுவுமில்லை. 1, 2 பிரதிவாதிகள் ரூ.1,75,000/-ரூபாய்க்கு கிரயம் பேசி முடித்தார்கள் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் தாவா சொத்தின் வழிகாட்டுதல் மதிப்பு என்ன என்று காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் பார்த்தேன், ஆனால் தாக்கல் செய்யவில்லை. 1 ம் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியயில்லாமல் சிகிச்சைக்காக பணம் தேவைப்பட்டது என்றும், அதற்காக 1,2 பிரதிவாதிகள் என்னிடம் கடன் கேட்டார்கள் என்றும், அப்போது ஆவணங்கள் எழுதி கொடுத்தால் தான் கடன் கொடுக்க முடியும் என்று நான் சொன்னேன் என்றும், அதன்பேரில் தான் 1,2 பிரதிவாதிகள் என் பெயரில் அக்ரிமேண்ட்டும், பூசப்பன் பெயரில் பவர் ஆப் அட்டானியும் எழுதி கொடுத்தனர் என்றால் சரியல்ல. என் பெயரில் எக்ரிமேண்ட் எழுதப்பட்ட தேதிக்கு மறுதினமே பூசப்பன் பெயரில் பவர் ஆப் அட்டானி எழுதப்பட்டது என்றால் ஆமாம். எக்ரிமேண்ட் போட்ட சமயம் நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.1,75,000 ரூபாய்யை வருமான வரி கணக்கில் காண்பிக்கப்படவில்லை என்றால் ஞாபகமில்லை. அந்த தொகை கடனிற்காக கொடுக்கப்பட்டது என்பதால் வருமான வரி கணக்கில் காண்பிக்கப்படவில்லை என்றும் , தற்போது வழக்கிற்காக ஞாபகமில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அகில இந்திய மனித உரிமை கழகம், ஈரோடு ல் நான் மாவட்ட தலைவராகவும் என் மனைவி செல்வி அதே கழகத்கதின் ஈரோடு மாவட்ட அரசு பணியாளர் பிரிவு மகளிர் அணி செயலாளராக பதவி வகித்தார் என்றால் சரியல்ல, என் மனைவியும் எந்த பதவியும் வகிக்கவில்லை, நான் மாவட்ட தலைவராக பதவி வகித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் போஸ்டரில் மாவட்ட தலைவர், ஈரோடு என்ற இடத்தில் உள்ள போட்டோவும் எஸ் கே சதாசிவம் என்ற பெயரும் உள்ளது நான் தான். அது **பிசாஆ 1.** நானும் என் துணைவியாரும் பார்ட்னராக இருந்து நடத்திய நிதி நிறுவனம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்றால் அவ்வாறு நிதி நிறுவனம் எதுவும் நாங்கள் நடத்தவில்லை. தீரன் சின்னமலை நிதி நிறுவனம் என்ற பெயரில் நான் நிதி நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால்

சரியல்ல,அந்த நிதி நிறுவனத்தின் ஆவணத்தை நீதிமன்றத்திற்கு வரவழைத்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் ஆட்சேபணை இல்லை. மருத்துவ செலவிற்காக 1,2 பிரதவாதிகள் ரூ.2,00,000 கடன் பெற்றார்கள் என்றும், அதற்கு ஆவணங்கள்பெற்றது மட்டுமின்றி ரூ.100 க்கு ரூ.4 வட்டி வேண்டும் என்று கூறி அதன் படி 1,2 பிரதிவாதிகள் வட்டி செலுத்தினார்கள் என்றால சரியல்ல. முதல் தவணையாக ரூ.8000/-த்தை 25.10.2000 அன்று என்னிடம் செலுத்தினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு வட்டி செலுத்தியதறக்கு நான் ரசீது கொடுக்கும் வழக்கம் இல்லை என்றால் சரியல்ல, கடனே கொடுக்கவில்லை அதனால் ரசீது கொடுக்கவில்லை. மேற்கொண்டு வட்டி செலுத்த முடியாமல் 1,2 பிரதிவாதிகள் திருப்பூரில் உள்ள பூர்வீக சொத்தை விற்று மொத்த தொகையை என்னிடம் திரும்ப செலுத்தி விட்டனர் என்றால் சரியல்ல. 05.01.2002 அன்று ஜோம்ஸ் வாத்தியார், கவுண்டச்சிபாளையம் என்ற பெயரில் 1,2 பிரதிவாதிகள் திரும்ப தந்த தொகை குறிப்பிட்டு, பாக்கி தொகையையும் குறிப்பிட்டு நான் ஒரு பேப்பரில் எழுதி கையொப்பமிட்டு கொடுத்துள்ளேன் என்றும், அந்த பேப்பர் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரியல்ல, அவ்வாறு நான் எழுதி கொடுக்கவில்லை, அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை. மேற்படி நான் எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தையும் என்னுடைய ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்து மற்றும் கையொப்பத்தையும் , கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பலாத்காரமாக நான் 1,2 பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முயச்சி செய்ததால் அவர்கள் புகார் கொடுத்து அதன்பேரில் வெள்ளோடு காவல் நிலைய கு எண் 150/2008 என்றமுதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 18.09.2008 ம் தேதி என் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய்யான புகார். அந்த புகார் அடிப்படையில் காவல் நிலையத்தில என்னை விசாரித்தார்கள் என்றால் ஆமாம். எனது செல்வாக்கை பயன்படுத்தி அந்த வழக்கை காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்காமல் கைவிடுமபடி செய்தேன் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் கிருஸ்தவ மதத்தை தழுவுவதற்கு முன்பு பட்டியல் இனத்தவர் என்பதால் 1,2 பிரதிவாதிகள் நான் தொடர்ந்து பட்டியலின

வகுப்பை சார்ந்தவர்கள் என்று தான் கருதினேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்து 1,3 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்ட எதிருரையில் பத்தி 10 மற்றும் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு மறுப்பு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் பட்டியலினத்தை சார்ந்தவர்கள் என்பைத பயன்படுத்திக் கொண்டு அவர்கள் கடனிற்காக பெயரளவில் எழுதி தந்த ஆவணங்களை கொண்டு என் மனைவி பெயரில் கிரய பத்திரம் உருவாக்கியுள்ளோம் என்றும், எனவே அந்த ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றும், என்னிடம் 1,2 பிரதிவாகிதள் பெற்ற கடனை முழுவதையும் திருப்பி தந்துவிட்டனர் என்றும், அதை நான் ஒப்புக்கொண்டு நான் கைப்பட கணக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றும், அதை வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல, ஆகையால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 30.10.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS